بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.்.பா 01/04/2016**

**(22 JAMADUL AAKHIR 1437 HIJRI)**

# "KHATAM-AN-NABIYYINE AND THE ADVENT OF PROPHETS"

## "காத்தமுன்னபியும், நபிமார்களின் வருகையும்"

**(PART – II)**



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திக் கொண்டு. ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷஹ்ஹுதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதிய பிறகு கீழ் வருமாறு உரையாற்றினார்.

2016 மார்ச் 26-ம் தேதி சுஹ்ர் தொழுகைக்கு பிறகு அநஹ்மதியான ஒரு முஸ்லீம் நண்பன் எனக்கு ஒரு முஸ்லீம் பத்திரிக்கை (ஸ்டார் நம்பர் 1625) (21-27 பிப்பிரவரி 2016 லக்கம்) வழங்கினார். அதில் "**நபீத்துவத்தின் சீல்**" என்ற தலைப்பில் 4-பார்ட்டாக எழுதப்பட்ட ஒரு கட்டுரை காணலாம். முஸ்லீம் சமுதாயத்தில் அனைத்து பண்டிதர்களும் இந்த விஷயத்தில் ஒரு தீர்மானத்தை எட்டியதாக ஒரு இமாம் அதில் கூறுகின்றார். இந்த உடன்படிக்கையைக் குறித்து நாம் சிந்தித்துக் கொண்டால், நமக்கு உணர்ந்து கொள்ளலாம் ஒன்றாம் நூற்றாண்டு முதல் இன்றய நாள் வரையிலும் உள்ள ஒவ்வொரு கடந்து சென்ற தலைமுறைகளும் முஸ்லீம் உலகிலுள்ள அனைத்து இறை சாஸ்திர பண்டிதர்களும் இவ்விஷயத்தில் ஒற்றுமையான ஒரு தீர்மானத்தை அடைந்துள்ளதாகவும் அதாவது தூய தூதர் முஹம்மது (ஸல்) விற்கு பிறகு எவருக்கும் நபியாகிட முடியாது என்றும், மாறாக எவரேனும் நபியென வாதம் செய்தால் அல்லது அவ்வகை வாதத்தில் நம்பிக்கைக் கொண்டால் அவன் ஒரு "கா.்.பிர்" ஆகிவிடுவதோடு

அவன் இஸ்லாமின் வட்டாரத்திலிருந்து புறம் செல்லவும் செய்கின்றான் என்றும் கூறியிருக்கின்றர். மேலும் அந்த இமாம் கீழ் கூறும் அத்தாட்சிகளும் எடுத்துரைக்கின்றார். அதாவது இந்த இறைசாஸ்த்திர பண்டிதர்களின் வார்த்தைகளை அதற்கு ஆதாரமாக குறிப்பிடுகின்றார்.

1. ஹஸ்ரத் இமாமே ஆஸம் அபூஹனீபா (ரலி) (80-150 ஹிஜ்ரா) அவர்கள் கூறினார்கள். (கடந்த வாரம் நான் கூறிக்கொண்டதைப் போன்று) **"எனக்கு பிறகு நபியில்லை"** (மனாஹிபுல் இமாமுல் ஆஸம் அபூஹனீபா, லபிமீனை அஹ்மதுல் மக்கி, வாளியம் 1 பக்கம் 161)
2. அல்லாம இப்னு ஜமீா் தோபரி (ரலி) (224-310 ஹிஜ்ரா) திருக் குர் ஆனின் இந்த வசனத்தை விளக்கிக் கொண்டு **"வலாக்கின் ரசூலல்லாஹி வ காத்தமன்னபியீன்"** நபிமார்களின் வாசலை அடைத்தமற்றொருவர் அன்னாராகும். பிறகு அதன் மீது ஒரு சீலும் அமைக்கப்பட்டது (தப்ஸீர் இப்னுஜரீா், வாளியம் 22 பக்கம் 12)
3. அல்லாம இப்னு ஹசம் (ரலி) அன்தலூசி (384-456 ஹிஜ்ரா) எழுதுகின்றார் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில், வெளிப்பாடின் தொடர் முஹம்மது (ஸல்) வின் வ.்.பாத்திற்கு பிறகு முடிவடைந்துது. அதற்கு ஆதாரம் வெளிப்பாடுகள் பெற்றுக் கொண்டேயிருந்த நபி, நபிமார்களின் இறுதியாவார். (அல்முஹல்லா, வாளியம் 1 பக்கம் 26)
4. ஹஸ்ரத் இமாம் ஹஸ்ஸாலி (ரலி) (450-505 ஹிஜ்ரா) அவர்கள் அன்னாரின் நூலான "இக்திசுவாதி" ல் எழுதுகின்றார்.

**"சந்தேகத்திற்கு இடமில்லாமல் சமுதாயம் ஒற்றுமையான ஒரு தீர்மானத்தை சென்றடைந்திருக்கின்றது. அதாவது "காத்தமுன்னபியீன்" என்ற வார்த்தை வழியாக இனி ரசூலோ நபியோ இறுதிநாள் வரையிலும் தோன்றுவதில்லை"** தொடர்ந்து இமாம் வேறு சிலர்களின் வசனங்களை எடுத்துக் கூறியப்பிறகு சொல்கின்றார். தூய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இறுதி நபியாவார்கள். வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என வாதம் செய்வோர்களை அல்லது அவ்வாறு நடித்துக் கொள்வோர்களை கா.்.பிர் என கூற வேண்டும். மேலும் அன்னார் கூறுகின்றார் ஒவ்வொரு முஸ்லீம் நாடுகளை சார்ந்த மஹான்களான பண்டிதர்கள், புஹஹாக்கள், முஹத்தீங்கள் முபச்சரீங்கள் அவர்கள் அனைவரும் காத்த முன்னபியீனைப் பற்றி இதே ஆலோசனைகளையே தெரியப்படுத்தியிருந்தார்கள். காத்தமுன்னபியீன் என்ற வார்த்தையின் பொருளைப் பற்றிய சிறு விளக்கம் அளிப்பதற்கு நான் விரும்புகின்றேன். அத்தோடு அதைக்குறித்துள்ள பிரபல முஸ்லீம் பண்டிதர்களின் ஆலோசனைகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

திரு குர் ஆனில் சூர: அஹ்சாபிலாகும் காத்த முன்னபியீன் என்ற வார்த்தை இடம்பெற்றிருப்பது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது

**"முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களுக்கெல்லாம் முத்திரையாகவும் இருக்கின்றார். மேலும் அல்லாஹ் எல்லா பொருள்கள் பற்றியும் நன்றறிந்தவன்"** (33:43)

பரிசுத்த தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள் **“ஆதாம் (அலை) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே நான் காத்தமுன்னபியீனாகயிருந்தேன்”** (தப்ஸீர் இப்னு கதீர், முஸ்னத் அஹம்மது இப்னு ஹம்பல்) தன் புதல்வன் வ.ஃபாத்தானநேரம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தன் மகனை நோக்கி கூறினார். **“இப்ராஹீம் வாழ்ந்திருந்தால் அவர் ஒரு நபியாக ஆயிருப்பார்”** (இப்னுமாஜா, வாளியம் 1 கித்தாபுல் ஜனாயிஸ்) திரு குர்-ஆனில் காத்த முன்னபியீன் என்ற வார்த்தை மேல் சுட்டிக்காட்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகளுடன் பொருத்தமுள்ளவையாகும். காத்தம் என்ற வார்த்தை இறுதி என்ற நிலையில் நேரவுமாக தொடர்புடையதல்ல

பிரபல முஸ்லீம் பண்டிதர்கள் காத்தமன்னபியீன் என்ற வார்த்தைக்கு வழங்கிய விளக்கங்களை காண்போம்

1. நபிமார்களின் வருகையினைக் குறித்தும் இமாமத்தின் விஷயத்தை பொறுத்தும் சர்ச்சை எழும்பும் போது, சிறந்த மஹான் ஆன ஒரு புண்ணியவான் ஷியா பிரிவின் ஆறாம் இமாம், இஸ்லாமிய முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஹஸ்ரத் ஜாபர் சாதிக் (ரலி) ஆவார். (மறைவு : 148 ஹிஜ்ரா 765 எ.டி) அவர்கள் கீழ்க் கூறும் திருமறை வசனத்தைக் குறித்து அன்னார் உரையாற்றும் பொழுது கூறினார் “**நிச்சயமாக இப்ராஹீம் சந்ததிகளுக்கு நான் வேதநூல் வழங்கியிருக்கிறேன்.**” இப்ராஹீம் நபி (அலை) மின் சந்ததிகளுக்கு நாம் கனிந்து நபிமார்களையும் தூதர்களையும் இமாமீங்களையும் வழங்கியிருக்கின்றேன். இப்ராஹீம் நபி (அலை) மின் சந்ததிகளுக்கு அல்லாஹ் வழங்கிக்கொண்டதில் மக்கள் ஈமான் கொள்கின்றனர். ஆனால் முஹம்மது (ஸல்) வின் சந்ததிகளுக்கு இந்த அருள்களை நீட்டி வழங்கும் பொழுது அவர்கள் அதை நிராகரிக்கின்றனர். இது முரண்பாடுவிளைவிக்கும் விஷயமேயாகும்.
2. உலகஅளவில் பிரபல திவ்வியன், ஆன்மீக தரிசன உலகின் சூரியன் என கூறப்படும் ஹஸ்ரத் மௌலான ஜலாலுத்தீன் ரூமி (ரலி) (பிறப்பு: 604 ஹிஜ்ரா/1207 எடி) (மறைவு: 672 ஹிஜ்ரா/1273 எ.டி) அவர்கள் கூறுகின்றார். நபித்துவத்தால் அருள் நிறைந்த நிலையில் நீங்கள் நன்மையின் பாதையில் கடின முயர்ச்சிகள் செய்யுங்கள். நீங்கள் ஒரேயொரு தோழராக இருந்தால்க் கூட. (மத்னவி மௌலான ரூமி, சேப்ட்டர்-1 பக்கம்-53)
3. ஸ்பெயினில் இருந்துள்ள பிரபல மஹான் ஆன ஷேக் ஹஸ்ரத் முஹையித்தீன் இப்னு அரபி (வ.ஃபாத் 638 ஹிஜ்ரா/1240 எ.டி) அவர்கள் கூறுகின்றார். “ஷரியத்துடன் தோன்றும் நபீத்துவம் முடிவடைந்தால்க் கூட மானிட குலத்திற்கு இறுதிநாள் வரையிலும் நபீத்துவம் தொடர்ந்து வரும். ஷரியத்துடன் தோன்றும் நபீத்துவம் அதொரு பிரத்தேகமான நபீத்துவம் ஆகும்”
4. ஹஸ்ரத் ஷெய்க் முஹையித்தீன் இப்னு அரபி மேலும் கூறுகின்றார் **“தறூத் பிரார்த்தனை மூலமாக முஹம்மது (ஸல்) வின் சிறப்பின் உயர்வைக் காண்பிக்கப்படுகின்றது அன்னார் தனது சந்தான பரம்பரையை நபிமார்களின் மேன்மைக்களவு உயர்த்திக் கொண்டார். அதுவழி ஹஸ்ரத் இப்ராஹிம் (அலை) மைவிட மிக சிறந்த மேன்மையினை வழங்கப்பட்டிருக்கின்றது. காரணம் அன்னார் எடுத்துவந்த ஷரியத் ஒரு பொழுதும் அழிவதில்லை”.** (புத்துஹாத்தி மக்கியா வாளியம்-1 பக்கம்-545)

5. ஆன்மீக தரிசன முடயவரும் தன் காலகட்டத்தில் ஷைகுமாகயிருந்த ஹஸ்ரத் ஷைக் பாலி அபன்ந்தி (வ.்.பாத் 960 ஹிஜ்ரா) அவர்கள் கூறினார்கள் **“காத்தமர் ரசூல் என்பதால் அர்த்தமாக்கிக் கொள்வது, புதிய ஷரியத்துடன் ஒரு நபியும் அன்னாருக்கு பிறகு தோன்றறுவதில்லை என்றாகும**” (ஷரஹ் புசூசுல் ஹக்கம்)
6. திவ்வியர்களின் திவ்வியனான இமாமும், 11-ம் நூற்றாண்டில் சீர்திருத்தளருமான ஹஸ்ரத் ஷெய்க் அஹ்மது பாறூகி சர்ஹிந்தி (வ.்.பாத் 1034 ஹிஜ்ரா/1624 எ.டி) அவர்கள் கூறினார்கள் **“காத்தமர் ரசூல் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) வுக்கு பிறகு ஒரு நபி தோன்றிக்கொள்வது தேர்ந்தெடுக்கப்பட்ட தன் தோழர்களில் இருந்தாகும். ஒரு பரம்பரை என்ற நிலையில் அவர்கள் தோன்றுவார்கள். அது காத்தமர்ரசூல் என்ற பதவிக்கு எவ்வித தீங்கும் விளைவிப்பதில்லை. ஆகவே நல்லவர்களாகிய வாசிப்பாளர்களே நீங்கள் சந்தேகத்தில் அகப்பட்டுவிடாதீர்கள்**” (மக்தூபாத் ஹஸ்ரத் இமாம் ரப்பானி ஹஸ்ரத் முஜத்தீத் அல்ப்தானி)
7. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ஹர் ஜனே ஜனான் நக்ஷபந்தி (வ.்.பாத் 1995 ஹிஜ்ரா/1781 ஏ.டி) ஆன்மீக தரிசனத்தின் பிரபல நபரும் பிரபல எழுத்தாளரும் கவியும் கட்டுரை எழுத்தாளருமான அன்னார் கூறுகின்றார். **“சரியத்துடன் தோன்றும் நபிமார்களின் வருகை மட்டுமே முடிவடைந்தது எல்லாம் வல்ல இறைவனின் மற்று அருள்களைக் குறித்து அவன் சற்றும் உலோபம் காட்டிக் கொள்வதுமில்லை, கஞ்சனாகயிருப்பதுமில்லை** (மஹாமாத் மஸ்ஹரி பக்கம்:88)
8. ஹஸ்ரத் மௌலான பாரன்ஹி மஹல் (வ.்.பாத் 1304 ஹிஜ்ரா) அவர்கள் கூறினார்கள் **“சுன்னி பிரிவினை சார்ந்த பண்டிதர்களும் நம்பிக்கைக் கொள்கின்றனர். அதை அவர்கள் கூறிக்கொள்ளவும் செய்கின்றனர். தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் ஆட்சி காலகட்டங்கள்குள் ஷரி அத்துடன் ஒரு நபியும் தோன்றுவதில்லை. காரணம் அன்னாரின் நபீத்துவம் இறுதிகாலம் வரையில் நிலைநிற்கும் என்பதனால் ஆகும். அன்னாரின் ஆட்சி காலத்திற்குள் தோன்றுகின்ற நபிமார்கள் நிச்சயமாக திரு நபி (ஸல்) வின் ஷரியத்தை பின்பற்றிக் கொள்போர்களாகயிருப்பார்கள்”** (மஜ்மா பத்தாவ், மௌலவி அப்துல் ஹக் வாளியம்-1 பக்கம்-144)
9. ஹஸ்ரத் முஹையத்தீன் இப்னு அரபி அவர்கள் கூறுகின்றார். **“தறூத் தை குறித்துள்ள ஆராட்சியிலும் சிந்தனையிலும் நாங்கள் ஒரு முடிவான தீர்மானத்தை அடைந்திருக்கின்றோம். அதாவது முஸ்லீம்களிலிருந்து நபியித்துவத்தின் விஷயத்தில், நபிமார்களின் நிலமைக்கேற்ப உயர்ந்து கொள்கின்ற நபர்களை அல்லாஹ் நாடினால் தோன்றுவார்கள். ஆனால் அவர்களுக்கு புதிய ஷரியத் வழங்கப் படுவதில்லை**” (புத்துஹாதெ மக்கியா வாளியம்-1 பக்கம்-545)
10. இஸ்லாமிய நம்பிக்கைகளின் ஒரு பகுதியினை முஸ்லீம்களை கற்பித்தது உம்முல் மும்மினீன் ஹஸ்ரத் ஆயிஷா சித்திக்கா (ஏலி) அவர்கள் ஆவார்கள் என்பது சர்வதேசிய அளவில் அங்கீகரித்த ஒரு உண்மையாகும். அவர்கள் கூறுகின்றார் **“ஏய் முஸ்லீம்களே நீங்கள் தூயதர் முஹம்மது (ஸல்) வை காத்தமுன்னபியீன் என கூறிக்கொள்ளுங்கள்.**

**ஆனால் அன்னாருக்கு பிறகு நபிமார்களில்லை என கூறாதீர்கள்''** (துர்ரீ மன்சூர் வாளியம்-5 பக்கம் 204)

11. ஷெய்குல் இமாம் இப்னு கத்தீபா (வ.ஃபாத் 267 ஹிஜ்ரா) ஹஸ்ரத் ஆயிஷா சித்திகா (ரலி) அவர்களின் அக்கூற்றை எடுத்துக் கூறிக்கொண்டு அதை விளக்கிக் கூறுகின்றார்

**''இந்த அறியிக்கை (ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) வின் தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் எனக்கு பிறகு நபியில்லை என்ற வசனத்திற்கு எதிராகுவதில்லை. ஏனெனில் உண்மையில் தூய தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அவ்வசனத்திற்கு பொருள் கொள்வது, அன்னார் மூலமாக இறக்கப்பட்ட ஷரியத்தை ரத் செய்கின்ற ஒரு நபியும் தோன்ற மாட்டார் என்றாகும்''** (தவீல் முகத்தலிபுல் அஹாதீஸ் பக்கம்-236)

12. பிரபல ஹதீஸ் பண்டிதன் இமாம் முஹம்மது தாஹிர் (வ.ஃபாத் 986 ஹிஜ்ரா 1578 எ.டி) அவர்கள் கூறியிருக்கிறார். **''ஹஸ்ரத் ஆயிஷ (ரலி) அவர்களின் இந்த நோக்கம் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் வருகைக் குறித்துள்ள எண்ணத்தின் அடிப்படையிலாகலாம். தூய தூதர் முஹம்மது (ஸல்) வின் ''எனக்கு பிறகு நபியில்லை'' என்ற வசனத்திற்கு இது எதிராகுவதில்லை. காரணம நபி கரிம் (ஸல்) அவர்கள் எண்ணியது தனக்கு பிறகு ஷரியத்திற்கு மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு நபியும் வருவதில்லை என்றே ஆகும்''**

13. ஹஸ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் டெல்லி (வ.ஃபத் 1176 எ.டி) அவர்கள் கூறினார்கள். **''தூய தூதர் (ஸல்) வின் ''எனக்கு பிறகு நபியுமில்லை ரசூலுமில்லை என்ற வசனத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது நபீத்துவம் முடிவடைந்திருக்கின்றது என்பதின் பொருள் ஷரிஅத்துடன் தோன்றும் நபித்துவம் முடிவடைந்துவிட்டது என்றாகும்''** (கிரா அத்துல் அய்னைன் பி தபஸ்ஸலூல் ஷெக்கய்னி பக்கம்-39)

14. பிரபலர்களாகிய மற்று முஸ்லீம் பண்டிதர்களின் விளக்கங்கள் ஆலோசனைகள் போன்றவைகளை கூறுவதற்குண்டு. அவர்கள் **''கத்தமுன்னபியின்'' ''லா நபீயா ப ஆதி''** என்ற வசனங்களுக்கு வழங்கிய விழக்கங்களும் இவ்வாறேயாகும் என புரிந்துக்கொள்ளுங்கள். மட்டுமின்றி அல்லாஹ் வாக்குறுதி வழங்கியிருக்கின்றான். ஒவ்வொரு நூற்றாண்டிலும் இஸ்லாமை சீரமைக்க ஆள்களை தோற்றுவிப்பான் என. காரணம் இதன் பாடங்களை வளைத்தொடிப்பதற்கான வாய்ப்புண்டு என அறிகின்றவன் அல்லாஹ் மட்டுமே. எனது முஸ்லீம்களே கடந்த நூற்றாண்டில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) வழியும் இந்த நூற்றாண்டில் கலீபத்துல்லாஹ் என்ற நிலையில் இந்த எளியவன்மூலமாகவும் இந்த வாக்குறுதி முழுமைப் பெற்றுவிட்டது என்பதற்கு நீங்கள் சாட்சிகளாவீர். அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் எப்போதும் நம்மை நேர்வழியில் நடத்திக்கொள்வானாக! ஆமீன்.

**ஆஸாத்ஷா சாஹிப்பின் கொலை ஸ்கோட்லன்டில்:-**

2016 மார்ச் மாதம் 24-ம் தேதியன்று 9 மணிக்கு 40 வயதான அஹ்மதி முஸ்லீம் ஆஸாத் ஷா சாஹிப் என்பவர் கொலை செய்யப்பட்டார். அன்னார் பாக்கிஸ்தானியாவார்.

''ரப்வாவில் வாழ்ந்து வருகின்றார். தற்பொழுது ஸ்கோட்லன்டில் க்கிலாஸ் ஹோயிலில் வசிக்கின்றார். அன்னாரை ஆக்கிரமணம் செய்த நபர் கத்தியால் 30 திற்கு உட்பட்ட குத்துக்கள் கத்தியால் குத்தியதாக விசாரனை அதிகாரிகள் கூறினார்கள்.

அன்னாரில் ஒரு சகோதரன் பக்கத்திலுள்ள கடையிலிருந்து இரட்சிப்பதற்கு வந்திருந்தும் அதற்கு முடியவில்லை. அன்னாருக்கும் கத்தியால் தாக்குதல் ஏற்பட்டது. ஆஸாத் ஷா சாஹிபை கீயூன் (Queen) எலிஸபத் யூணிவேழ்சிற்றி ஹோஸ்பிற்றலில் சேர்க்கப்பட்டிருந்தும் அங்கு கொண்டு செல்லும் நேரத்திலே மரணபட்டுவிட்டார். கேஸ் நடந்து வருகின்றன. கொலையாளி தன்வீர் அஹ்மது என்று வெளிப்பட்டுவிட்டது. 32 வயது. வடக்கு இங்கிலாந்தில் பிராட் போர்டினை சாந்த அன்நபர் கிலாஸ் கோயில் வந்தது ஆஸாத் ஷா சாஹிப்பை கொலை செய்ய வேண்டும் என்ற லட்சியத்துடன் ஆகும். இவ்விவரம் கைதுசெய்த ஸ்கோட்டிஸ் அதிகாரிகள் கூறினார். 2016 ஏப்ரல் 5-ம் தேதி முதல் விசாரனை துவங்கிக் கொள்ளும்

சில வருடங்களாக ஆஸாத்ஷா சாஹிப்பும் நானும் தொடர்பு கொண்டு வந்தோம். அன்னாரின் கட்டுரைகளும் வெளிப்பாடுகளும் எனக்கு இ-மெயில் வழியாக அனுப்பி வைத்திருந்தார். இரண்டு மூன்று முறை நாங்கள் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டோம். பலமணிநேரம் பேசினோம். இன்டர் நெட் வழியும் நிரந்தரம் தொடர்பு கொண்டிருந்தோம். 2014-ல் எனது லண்டன் பயண நேரம் என்னைப் பார்க்க முடியாததால் அன்னார் வருத்தம் தெரிவித்தார். என் வருகையை குறித்து தகவல் கிடைத்திருந்திருந்தால் கண்டிப்பாக உங்களை பார்க்க வந்திருப்பேன் என அன்னார் கூறியிருந்தார். என்னோடு இணைந்த செயல்படுவதற்கு அன்னார் விருப்பம் தெரிவித்தார். அந்த வருடம் அன்னார் என்னிடம் கூறினார் அன்னாரை தன் தேர்ந்தெடுத்த அடியனாக அல்லாஹ் உயர்த்திக் கொண்டான் என்றும் ஏராளமான பதவிகளும் வழங்கியிருக்கின்றான் என்றும் கூறினார். அன்னார் என்னுடன் இணைந்து செயல்படுவதற்கான விருப்பத்தையும் தெரிவித்தார். அதுவே நானும் அன்னாரும் செய்துகொண்ட இறுதி உரையாடல். அதற்கு பிறகு நான் மிகப் பெரிய வேலைகளில் மூழ்கியிருந்தேன் ஆனால் நாங்கள் இ-மெயில் மூலம் தொடர்பு கொண்டிருந்தோம்.

நானும் ஜமாஅத்துச்சஹிஹீல் இஸ்லாமும் இந்த கொடுமையான கொலையை முழுமையாகக் கண்டிக்கிறோம். எங்களின் இதயங்கள் நிறைந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிக்கின்றோம் **“இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜி ஊன்”** அல்லாஹ் அன்னாரை எப்போதும் அவன் தணலில் பாதுகாப்பானாக! அன்னாருக்கு மன்னிப்பு வழங்கட்டும். இந்த துயர கட்டத்தில் அன்னாரின் குடும்பத்திற்கு அல்லாஹ் பொறுமை வழங்கட்டும். ஆமீன்.


**Issued by:**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by:**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**